1972 மார்ச் 13]

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி: நான் முதலிலேயே சொன்னேன். 1958ம் ஆண்டு மே மாதம் அப்படிப்பட்டவொரு செயற்குறிப்பினை அரசு ஏற்றுக் கொண்டு பெண்களுடைய விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்பட்டன. அப்பொழுது யாரும் முன்வரவில்லை. மறுபடியும் அந்த முயற்சியை மேற் கொள்வதைப் பற்றிப் போலீஸ் அதிகாரிகளிடமும் ஏனைய அதிகாரிகளிடமும் யோசிக்கவேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: காவல் துறைக்கு சமீபத்தில் தான் பெண்களை டில்லியில் சேர்த்திருப்பதாக நான் பத்திரிகையில் ஒரு செய்தி பார்த்தேன். மேல் நாடுகளில் நீண்ட நெடுங்காலமாகவே பெண்கள் காவல் துறையில் இருக்கிறார்கள். ஆகவே, 1958 ஆம் ஆண்டில், ஆரம்பித்ததைக் கொஞ்சம் விரிவுபடுத்தி, அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு அரசு. முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி: மேல்நாடுகளிலும், திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் குறிப்பிடுவதைப்போல் டில்லியிலும் இப்படிப்பட்ட முயற்சி கள் இருக்கலாம். ஆனல், நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் அதற்கு ஏற்றவகையில் சூழ்நிலைகளெல்லாம் அமைந்தாக வேண்டும். அதற்குப் பெண்கள் எந்த அளவுக்கு விரும்புகிறார்கள் என்று தெரிந்தாகவேண்டும். அவைகளையெல்லாம் ஆய்வு செய்தபிறகுதான் அதுபற்றிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள இயலும்.

அம்மாப்பேட்டை காவல் நிலையத்துக்குக் கட்டடம்

*378 வின—திரு. ந. சோமசுந்தரம்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், அம்மாப்பேட்டையில் காவல் நிலையமும், காவலர் இல்லமும் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி: இல்லை.

குடும்பக்கட்டுப்பாடு பற்றிய திரைப்படம்

*451 வின—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

குடும்பக்கட்டுப்பாடுத் துறையினரால் திரைப்படம் ஏதேனும் தயாரித்து வெளியிடப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அடையாறு அரசு திரைப்பட நிலையத் தில் "நாம் இருவர்—நாம் பெறுவதும் இருவர்" என்ற செய்திப்படமும், "போதும் ஐயா" என்ற ஒரு சிறு வண்ணப்படமும் எடுத்து முடிக்கப்பட்டு